சைவ சித்தாந்தம்
(கருத்துகள்)

மாணவருக்கு

பொதிகை பதிப்பகம்
கடலூர் N. T.

சைவ சித்தாந்தம்

மறைமலை அடிகள்

கடவுள், உலகம், உயிர் என்னும் முப்பொருள்களையும்பற்றி எழுந்த பலதிறப்பட்ட கொள்கைகளும், அக்கொள்கைகள் எல்லாவற்றையும் பற்றிய ஆராய்ச்சிகளும், அவற்றுள் பொருந்துவன இவை பொருந்தாதன இவை என்னும் பகுத்தறிவு நிகழ்ச்சியும், பொருந்துவனவற்றை தெளித்துரைத்து உண்மை முடிபு காட்டும் சித்தாந்தமும் ஆகிய இவை எல்லாம் சைவ சமயத்தின் கண்ணே விளங்கிக் கிடத்தலால், எல்லா மதங்களும் சைவ சமயத்தின் கண்ணே அடங்கத் தான் எதினும் அடங்காதாய் விறி நிற்றலில் சைவசமயம் ஒன்றே எல்லாவற்றினும் சிறந்த உண்மை மதம்.

கடவுள் - எப்பொருளையும் கடந்தோன் என்ற அவன் தன் எட்டா நிலைமையினையும், **இறைவன்** - எப்பொருளிலும் தங்குபவன் என்ற அவன் தன் எங்குமுள்ள நிலைமையினையும், **முதல்வன்** - அவன் எதற்கும் முற்பட்டவனாய் நிற்கும் அவன்தன் முதன்மையினையும் அறிவித்தல் போல **சிவன்** - அவன் ஏனை எப்பொருளிலும் இல்லாத பேரின்பத்திற்கு உறையுளாய் உள்ளவன் என்பதனை அறிவிப்பதொன்றும்.

கா. சு. பிள்ளை

சைவம் என்றது **சிவம்** என்னுஞ் செந்தமிழ்ச் சொல்லடியாய்ப் பிறந்து சிவனோடு தொடர்புடைமை என்னும் பொருளில் வழங்குவது. சிவனைப்பற்றிய நிலையையும் சைவநூல்களையும் சிவனடி சேர்தற்கு உரிய நெறியையும்

அச்சொல் குறிக்கும். **சித்தாந்தம்** என்பது **சித்த அந்தம்** என்ற இரு சொற்களால் ஆகி முடிபின் முடிபு என்று பொருள் பெறும். சைவ நூல்களின் முடிந்த முடிபைக் கூறும் நூல்களைச் சைவ **சித்தாந்தம்** என்ப. முடிபாய் வழி இஃதேயென உணர்த்தி நின்றது **சித்தாந்த** மென்னும் சொற்றொடர்.

முதல்வன் இயற்கை அறிவினன் ஆதலாலும், உயிர் செயற்கை அறிவுடையது ஆதலாலும், முதல்வன்கணின்று உயிர் தோன்றியதென்று கொள்ள இடமில்லை. உலக மூலமாகிய மாயை அறிவில்லாதது, ஆகலின் அதுவும் அறிவுடைய பொருளினின்று பிறப்பது அல்ல. ஆதலின் **கடவுள், உயிர், உலகம்** என்ற மூன்றும் வெவ்வேறே. முதல்வனது திருவருள் ஒன்றே மூன்றையும் தொடர்பு படுத்துவதாம்.

அந்தணர் என்ற சொல்லைப் போலவே **பார்ப்பார்** என்ற சொல்லும் தமிழே. பார்ப்பார் என்றமையாலே அஃது ஆரியப் பிராமணரைக் குறிப்பதெனத் துணிவது தற்காலத்திற்குப் பொருந்துமாயினும் பண்டை நூலாராய்ச்சிக்குப் பொருந்துமாறில்லை. ஆரிய பிராமணர்க்குரிய வேள்வி முதலிய தொழில் தமிழ்ப் பார்ப்பாருக்கு உரிய தொழில் என்று கொள்ளுதலும் தவறே. நுணுகி ஆராயுமிடத்து அன்புமிக்க வழிபாட்டினுல் கடவுட் காட்சி பெறவல்ல தமிழ்மக்களே பார்ப்பார் எனப்பெற்றனர் என்பது விளங்கும். கடவுளை ஒரு வடிவத்திலே வழிபாடு செய்வதற்கு முதல் நின்று உதவுவாராகிய **ஆதிசைவரே** பண்டைப் பார்ப்பார். முப்பொழுதும் திருமேனி தீண்டுவாரும் அவரே.

ஞான முதல்வனைச் சுட்டும் பழந்தமிழ்ச் சொற்கள் கடவுள், இயவுள், கந்தழியென்பன. '**கடவுள்**' என்பதின் நேர்பொருள்

'கடந்துள்ள பொருள்' என்பது. இச் சொல் தமிழில் மிக்க பழமையானது. அவ் வாறே இயவுள் என்ற சொல்லும் ஆம். '**கந்தழி**' என்றசொல் பற்றிலான், சுட்டிறந் தவன் என்னும் பொருளையுடையது.

'**சிவம்**' என்ற சொல் செம்மையடியாகப் பிறந்தது. செம்மை என்பது நன்மை, நேர்மை, சிறப்பு, மங்கலம், சுகம் என்கின்ற பண்பினை யும் செந்நிறம் என்ற நிறத்தையும் குறிக்கும் ஒரு சொல். ... கடவுளை திருவள்ளுவர் செம்பொருள் என்றார். செம்பொருள் என் னும் சொற்றொடரின் பொருளே சிவம் என்பத தற்கும் கொள்ளப்படும். இப்பொருளிலே தான் 'சிவம்' என்பது வடமொழியிலும் வழங்குவது. சிவம் என்ற சொல்லை வடமொழி யாகக் கொண்டு கூறும் தாதுப்பொருள் தமிழ்ச் சொற்பொருள் போல அவ்வளவு

சிறந்த தன்று. பொருளால் அன்றி சொல்லா லும் சிவம் என்பது தமிழே.

உலகத்தில், மதங்களுக்குப் பெயர், வழி படும் தெய்வத்தை வைத்தாவது, சமயத் தலைவன் பெயரைத் தழுவியாவது, பிரமாண நூல்களைப் பொறுத்தாவது அமைவதே அன்றி மக்கள் இனத்தின் பெயரால் அமைவதில்லை. வழிபடுங் கடவுளின் பெயர் 'சிவம்' ஆயின் அம்மதம் சைவம் எனப்படும். தெய்வத்தின் பெயர் ' விஷ்ணு' ஆயின் மதம் வைணவம் எனப்படும். கிறிஸ்து, முகம்மதிய, புத்த, சைன மதங்கள் சமயத்தலைவர்கள் பெயரால் ஏற் பட்டவை. வைதிகம், ஸ்மார்த்தம், என்னும் மதங்கள் வேதம், ஸ்மிருதி முதலிய பிரமாண நூல்களின் பெயர் பெற்றன. இந்துமதம் என்ற சொல் கடவுள், ஆசிரியன், பிரமாண நூல் என்பவற்றுள் எதன் பெயரையுஞ்

சார்ந்ததாகத் தெரியவில்லை. சிந்து நதிக்கரையில் இருந்தவர்களை ஹிந்துக்கள் என்று பாரசிகர் அழைத்தனர். அவர்களை இந்துக்கள் என்று கிரேக்கர்கள் கூறினர். இந்துக்கள் என்ற பெயரிலிருந்தே இந்தியா என்ற பெயர் ஏற்பட்டது. இந்திய நாட்டு பூர்விக மக்களை ஐரோப்பா கண்டத்தாரால் இந்துக்கள் என்று அழைக்கப்பட்டனர். இந்துக்களுக்குள் பல மதங்கள் இருப்பதை அறியாத மேலை நாட்டினர் இந்துக்கள் எல்லோருக்கும் ஒரு மதம் இருப்பதாக எண்ணி இந்துமதம் என்ற பெயரைத் தோற்றுவித்தனர். இந்துமதம் என்ற பெயர் தமிழிலாவது வடமொழியிலாவது உள்ள பண்டை நூல்களில் கிடையாது. தற்காலத்தில் வடமொழி வேதத்தைப் பிரமாணமாகக்கொண்ட வைதிகர்கள் தங்கள் மதமே இந்துமதம் என்று பேசுபவராய், அம்மதமே

இந்திய நாட்டிலுள்ள எல்லா மக்களுக்கும் உரிய மதம் என்று நிலைநாட்ட முன் வந்துள்ளார்கள். ஆங்கில, ஜப்பானிய, அமெரிக்க மதங்கள் என்று மதங்கள் இருக்குமாயின் இந்துமதம் என்ற ஒரு மதமும் உண்டெனலாம். அவை இலவாதல் போல **இந்துமதம் என்ற ஒரு மதமும் கிடையாது.**

இந்து மதம் என்பது சுமார்த்த மதமே அல்லது சுமார்த்த வேதாந்த மதமே என்ற தப்புக் கொள்கை சுமார்த்த மதத்தினர் பெரு முயற்சியால் மக்கள் மனதில் அழுந்திக் கிடக்கிறது.

ஆகமம் என்னும் வடசொல் வந்தது என்னும் பொருட்டு. அது தமிழரிடமிருந்து ஆரியருக்கு வந்தது என்று ஊகித்தற்கு இடந்தருவது. பூசைக் கிரியைகள் யாவும் சைவ சித்தாந்த உண்மைகளை அடையாளமாகக் காட்டுவன.

திரு. வி. க.

உலகு, உயிர், கடவுள் என்னும் மூன்றும் என்றும் இருப்பன. உலகு மாறுதல் அடையும் உள்பொருள். உயிர் அறியாமை விரவிய அறிவாகிய உள்பொருள். கடவுள் அறியாமையே இல்லாத முற்றறிவுடைய உள்பொருள்.

உயிருக்கு உலகும் கடவுளும் வேண்டும். கடவுளுக்கு உலகும் உயிரும் வேண்டும். உலகும் உயிரும் இல்லையேல் கடவுளும் வேண்டுவதில்லை. உலகைக்கொண்டே கடவுள் உயிருக்கு நலன் செய்து உயிரைத் தன்னைப் போல் ஆக்குதல் வேண்டும். முப்பொருளும் இவ்வாறு ஒன்றுக்கொன்று இன்றியமையாதன.

'உள்ளது போகாது இல்லது வாராது' என்பது பழமொழி. இது சத் காரிய வாதம் எனப்படும். சித்தாந்தம் சத்காரிய வாதத்தை அடிப்படையாகக் கொண்டது.

உயிர் - சடமும் அல்லாததாய், முற்றறிவாகிய கடவுளும் அல்லாததாய், சடத்துடன் சேரும்போது சடம் போலவும், கடவுளுடன் சேரும்போது கடவுள்போலவும் நின்று, சார்ந்ததன் வண்ணமாயிருப்பது.

கடவுள் - அறியாமை இல்லாதது; முற்று அறிவாய் இருப்பது. உலகு உயிர்களில் நீக்கமற நிறைந்திருப்பது; அவைகளைக் கடந்தும் நிற்பது; போக்குவரவில்லா திருப்பது;எல்லாம் ஒடுங்குதற்கும் தோன்றுதற்கும் நிலைக்களனாயிருப்பது.

வெயிலில் உள்ள ஒருவன் நிழலை நாடுதல் இயல்பு. ஆதலால் உயிர், முழு ஒளி – நினைப்பு – அறிவு – இன்பு – உள்ள இடத்தினின்றும் ஈண்டுப் போந்திராது. அது முழு இருள்-மறப்பு-அறியாமை – துன்பு – சூழ்ந்த இடத்தினின்றுமே ஈண்டுப் போந்திருத்தல் வேண்டும்.

இறைவன் முற்றறிவு உடையவன் ஆதலின், அவன்பால் இரக்கம் இயல்பாகவே அமைந்திருக்கிறது. இரக்கம், துன்பம்கண்ட இடத்தில் அஃது எழுந்து துன்பத்தைப் போக்க முயல்வது அதன் தன்மை. உயிர், தன் நிலை அறியாது இருளில் மூழ்கிக்கிடக்கிறது. இறைவனது இரக்கம் உயிரைத் துன்பத்தினின்றும் விடுதலை செய்ய முனைகிறது. இறைவன் இரக்கத்தால் உயிரின்கட்டை அவிழ்த்து, அதைத் தன்னைப் போல் ஆக்கத் திருவுளம் கொள்கிறான். இறைவன் உயிரின் கட்டைப் படிப்

படியாக அவிழ்க்க அதற்குப் பலதிற மாயா உடலம் அளிக்கிறான். உயிர் மாயா உடலம் பெற்றதும் சிறிது அறிவு விளங்கப்பெறுகிறது. மாயை உயிரின் அறியாமையை நீக்குதற்குரிய கருவி. தனு கரண புவன போகங்கள் எல்லாம் மாயையின் காரியப்பாடேயாம்.

மாயா காரியமாகிய தனு கரண புவன போகங்களை உயிருடன் இறைவன் சேர்ப்பதே படைப்பு என்பது. இப்படைப்பில் புதுமை ஒன்றுமில்லை. உயிரும் உள்ளது; மாயையும் உள்ளது; கடவுளும் உள்ளது. உயிர் அறியாமைக் கட்டில் இருப்பதால் அது தானே மாயையுடன் சேர்வதில்லை. மாயை சடமாதலின் அதுவும் தானே உயிருடன் புணர்வதில்லை. இரண்டையும் சேர்க்க ஒருபொருள் வேண்டப்படுகிறது. அஃது உயிரைப்போல

அறியாமைக் கட்டில்லாததாய், மாயையைப் போலச் சடமுமில்லாததாய், முற்றறிவு உடைத்தாய் இருத்தல்வேண்டும். இவ்வியல்புடைய ஒன்றே கடவுள் என்பது. உள்ள ஒன்றுடன் உள்ள ஒன்றைச் சேர்ப்பதே கடவுள் புரியும் படைப்புத்தொழில்.

மக்கட் பிறவியில் உயிர்க்குப் பகுத்தறிவு முகிழ்க்கிறது. பகுத்தறிவின் இயல்பு, பிற வுயிர்களைத் தன்னைப்போல கருதுவது. இவ்வியல்பை மேலும் மேலும் பெருக்க உயிர் முயலுதல் வேண்டும். இம்முயற்சியில் தலைப்படாத உயிர் தெய்வ நிலையடையாது.

பகுத்தறிவு விளங்கியதும் உயிர், தன்னை இந்நிலைக்குக் கொணர்ந்த இறைவனிடம் நன்றியறிதலுடையதாய், அவனை நினைந்து உருகும் பயிற்சியில் நிலைத்து நிற்றல்வேண்டும்.

உருகும் உள்ளம் இறைவனுக்குக் கோயிலா தல் ஒரு தலை. பகுத்தறிவுடைய மக்களுக்கு இறைவழிபாடு இன்றியமையாது வேண்டற்பாலது. இறைவனது நன்றியை மறந்து, அவனை நினையாது வாழும் உயிரைத் தீவினை சூழ்ந்து உறுத்தும். அதனால் பிறவி வளரும். பிறவியில்லாக் கடவுளை உன்ன உன்னப் பிறவி வேர் அறும்.

இரண்டு பொருள் ஓரிடத்தில் இடம் பெறா என்பது உண்மையே. எள் உள்ள இடத்தில் கொள் இருத்தல் முடியாது; அஃதுள்ள இடத்தில் இஃதிருத்தல் முடியாது. எள்ளுங் கொள்ளும் எல்லையுடைய வடிவப் பொருள். எல்லையுடைய வடிவப் பொருள், ஒன்றுள்ள இடத்தில் மற்றொன் றிருக்க இடம்பெறுதல் அரிதே. கடவுள்

எல்லையுடையபொருள் அன்று. அஃது உருவ மற்றது; எல்லையற்றது; அகண்டமானது. அவயவப்பொருளுக்கேற்பட்ட நியாயத்தை நிர் அவயவப்பொருளுக்கு எடுத்துக்காட்டுதல் தருக்க முறையாகாது. ஆகாயம், தனித்தும் மற்றப் பூதங்களில் நிறைந்தும் இருப்பது. அது மற்றப் பூதங்களில் பாய்ந்திருப்பது உண்மை. ... ... ஆகாயம் போன்றது கடவுள்; மற்ற பூதங்கள் போன்றவை உலகும் உயிரும். ... ... இங்கே இரண்டு பொருள் ஓரிடத்தில் இடம் பெறு என்னும் நியாயத்தை எடுத்துக் காட்டுவது அறிவுடைமையாகுங் கொல்!

உலகு உயிருடன், கடவுள் நீக்கமறக் கலந்துள்ள நிலையையே அத்துவிதம். மெய்கண்டார் சார்பினர் அகரத்திற்கு அன்மைப் பொருள் கூறுகிறுர்; ஏகான்மவாத சார்பினர்

அகரத்திற்கு இன்மைப் பொருள் கூறுகிருர். ... அகரத்திற்கு அன்மைப்பொருளும் உண்டு; இன்மைப் பொருளும் உண்டு. அமலம் அநேகம் என்னுஞ் சொற்களை எடுத்துக் கொள்வோம். இரண்டிலும் அகரம் இருக்கிறது. அமலம் - மலமில்லை என்பது பொருள். அநேகம் - ஒன்றல்ல, பல என்பது பொருள். முதலிலுள்ள அகரம் இன்மைப்பொருளையும், இரண்டாவதிலுள்ள அகரம் அன்மைப் பொருளையும் தருகின்றன. அநேகம் என்பதிலுள்ள அகரத்திற்கு இன்மைப்பொருள் கூறின், அநேகம் என்பது பல என்னும் பொருள் இழந்து ஒன்றும் இல்லை என்னும் பொருளுடையதாம். அநேகம் என்பதற்குப் பொருள்பல என்று எவருஞ் சொல்வர். இதனுல் எண்ணுப் பெயருடன் வரும் அகரம் அன்மைப் பொருளையே தரும். அத்துவிதம்

என்பதிலுள்ள அகரம், துவிதம் என்னும் எண்ணுப் பெயரையொட்டி இருத்தலான், அகரத்திற்கு அன்மைப் பொருள் குறிப்பதே இலக்கண வரம்பும் உலக வழக்குமாம்.

கா. சு. பிள்ளை

நாளடைவில் வடமொழி வேதப் பாட்டுக்கள் சிலவற்றிலும் உபநிடதங்கள் சில வற்றிலும் சைவக் கருத்துக்கள் புகுந்ததனோடு அறிவனூலின் கருத்துக்களைத் தழுவிய பெரு நூல்களாக வடமொழித் தந்திரங்களும் ஏற் பட்டன. **இச் செய்தி சரித்திர சம்பந்தமாக மிக முக்கியமானது.** ஏனெனில் தென்னாட்டிலே கடல் வெள்ள பெருக்கு இருமுறை ஏற்பட்டுத் **தென்மருதையும்,** வால்மீக முனிவரால் போற் றப் பெற்றதாய்ப் பொன்வாயில்களை யுடைத் தாயிருந்த **கபாடபுரம்** என்னும் ஊரும் நீருள்

மூழ்கிப்போன காலத்து அங்கே சேர்த்து வைத்திருந்த பல்கலைத்துறை நூல்கள் யாவும் அழிந்து போகவும், வடமொழியிலுள்ள தந்திரங்களிலேதான் தமிழ் அறிவர்களது கடவுட் கொள்கையானது வடமொழியாளர் செய்த மாறுதலோடு காணப்படுவதாயிற்று. தமிழிலே தொல்காப்பியமும் திருவள்ளுவர் நூலுமே பண்டைத் தமிழரது கடவுட் கொள்கையைப் பொதுவாக வற்புறுத்தி நிற்கின்றன. சங்க காலத்திற்குப்பின் திருமூல மாமுனிவராலும் பிற சித்தர்களாலும் **சித்தர் நூல்கள்** ஏற்பட்டன. அவைகளிலே சமயக் கருத்துக்களைக் குறிப்பதற்கு வடமொழி தந்திரச் சொற்கள் வழங்குவன ஆயின. அக்காலம் தொட்டு வடமொழி உபநிடதங்களும் ஆகமங்களுமே சித்தாந்தத்திற்கு மூல நூலென்று தமிழ் மக்கள் கருதுவாராயினர். வட நூல்களிலே பலபல

மதத்தாரது கொள்கைகள் எழுந்து நிலவியத னல் அவற்றை யெல்லாம் மறுத்து முடிந்த முடிபைக் கூறும் சைவக் கொள்கை **சைவ சிந்தாந்த** மெனப் பெயர் பெறுவதாயிற்று.

தந்திர சம்பந்தமுடைய அறு சமயங்க ளாகிய கணபதி, குமார, சூரிய, சக்தி, வைணவ மதங்கள் முதலியன வழிபடு நெறி களைக் குறிப்பனவே யொழியத் தத்துவக் கொள்கையிற் சித்தாந்தத்திற்கு வேறுபட்டவை யல்ல. தத்துவங்களுள் ஒவ்வொன்றினை முடிபாகக் கூறும் வேற்றுமை காரணமாகச் சித்தாந்தம், வேதாந்தம், போதாந்தம், நாதாந் தம், யோகாந்தம், காலாந்தம் என்று ஆறு அந்தங்கள் திருமூல முனிவரால் கூறப்பட்டுள்-ளன. அவை யெல்லாஞ் சைவத்தின் உட் பகுதிகளே.

ஏகம் என்ருல் ஒன்று; அத்துவிதம் என்ருல் இரண்டல்லாத என்று பொருள். கடவுள் உலத்தோடு அத்துவிதமாயிருக்கிருர் என்ருல் அவர் உலகத்தோடு இரண்டறக் கலந்து அதனை நடத்துகிருர் என்பதே கருத்து. அதற்கு அவ்வாறு பொருள் கொள்ளாமல் கடவுளே உலகமாயிருக்கிருர் என்று ஏக ஆன்ம வாதிகள் கொண்டனர்.

வைதிகச் சார்பாகிய நூல்களையும் வேதாந்த சூத்திர பாடியங்களையும் பிரமாண மாகக் கொள்ளும் சமயங்கள், ஏக ஆன்ம வாத முடிபையும், ஆகமச் சார்பாகிய சம-யங்கள் பெரும்பாலும் **சைவ சித்தாந்தத்தை**யும் தழுவி நிற்கின்றன.

ஏக ஆன்மவாதக் கொள்கைகளில் சைவ சித்தாந்தத்திற்கு நேர் பகையானது என்ன

வென்ருல் சித்துக்கும் சடத்திற்கும் உள்ள வேறுபாட்டைத் தெளிவு படுத்தாமையும் சிற்றுயிர்கள் பலவற்றையும் கடவுளே என்று கூறுதலுமாம்.

சைவ சித்தாந்தத்திலே இயற்கை உலகத்தைத் துருவத் துருவி ஆய்ந்து அதன் மூலத்தைக் கண்ட முறையை வேறு எச்சமயத்திலும் காணுதல் அரிதன்றே கூறலாம்.

மாயா என்ற சொல்லிற்கு ஏக ஆன்மவாதிகள் கூறும் பொருள் வேறு, சித்தாந்திகள் கூறும் பொருள் வேறு. முன்னேயோர் பொய்த் தோற்றம் என்ற பொருள் கொள்வர். பின்னேயோர் தமிழ் முறைக்கேற்ப அச் சொல்லின் ஒவ்வொரு எழுத்திற்கும் பொருள் தனித்தனியே கொள்வர். மா-யாவும் ஒடுங்குதல் என்ற பொருளேயுடையது; யா-வருதல்

என்ற பொருளைத் தரும். இவ்வாறு கொள்ளும் பொருளைத் தமிழிற்கு ஏற்றவண்ணம் வேறு முறையிலும் கொள்ளலாம். **மாய், ஆ** என்ற இரண்டு சொற்களின் பொருளே, மாயை என்பதின் கருத்தை விளக்கும். மாய்தல், மறைதல் என்னும் பொருளையுடையது. ஆ என்பது ஆதல் என்னும் பொருளையுடையது. எல்லாம் ஒடுங்கி மீளவும் உளதாதற்கு முதற் காரணமானது மாயா என்பது. அதுவே மாயையெனத் திரிந்தது. .... மாயைகளின்று தோன்றுங் தத்துவங்கள் தமிழில் முதல் எனப்படும். 'முதல் முப்பத்தாறே' என்றது திருமூலர் திருமந்திரம்.

ஆன்மாவானது மலத்தினின்று நீங்கித் தூய்மை அடைவதற்குத் தத்துவங்களின் உதவி வேண்டற்பாலது. கடவுள், தத்துவங்கள் எல்லாவற்றையும் கடந்தவர். தன்

பொருட்டு அவற்றை வேண்டுபவர் அல்லர். உயிர்களின் பொருட்டுத் தத்துவங்களாலாகிய உலகைக் கடவுள் படைக்கின்றார். சடவுலகத்திற்கு மூல காரணமாகிய மாயையும் சடமே. **கடவுளில் இருந்து உலகம் உண்டாகிறது என்ற கொள்கை சைவ சித்தாந்தத்தில் இல்லை.** மாயை தன்னந் தனியாக உள்ள சடமூலமேயன்றிக் கடவுளின் பகுதியல்ல என்பதே **சிந்தாந்தக் கருத்து.** ஆதலால் அசித்தின் இலக்கணத்தையும் சித்தின் இலக்கணத்தையும் மயக்கம் செய்யும் விபரீதக் கொள்கை இதன் கண் இல்லை.

உயிரின் இயல்பைச் சித்தாந்தம் தெளிவுபடக் கூறுவது போல வேறு எச்சமயமும் கூறுவதில்லை. ... உயிர்கள் அறிவு, இச்சை, செயல் உடையனவாய் எண்ணிலாதவாய்க்

கடவுளின் வேருய், கடவுளின் ஆட்சிக்குட் பட்டனவாய்க் கடவுளால் திருத்தமுறத் தக்கனவாய் உள்ளன என்று சைவ சித்தாந் திகள் சொல்லுவார்கள்.

கடவுளும் உலகமும் உயிரும் அத்துவித மாகக் கலந்து நிற்கின்ற நிலையில் கடவுள் பிறவற்ருல் துவக்குறுமல் தம் வயம் உடைய வராய், பேர் அருள் உடையவராய் விளங்கு கின்ருர். உயிரானது உலகத்தை நோக்கிய பார்வையை மாற்றிக் கடவுளை நோக்கிஞல் கடவுளது திருவருள் அதனில் பதிய அது கடவுள் மாட்டே, பின் எக்காலத்தும் சென்றி யைவது.

கடவுள் உலகத்தோடு அத்துவிதமா யிருப்பினும் தன்பொருட்டு ஒன்றையும் வேண் டாதவராதலால் உலகத்தின் வேருகிய தனி

நிலையையுடையவர். அதுவே கடவுளின் சிறப்பு இயல்பு. அச்சிறப்பினைத் தலைப்படுதலே சைவ சித்தாந்தத்தில் **முத்தி** யென்று கூறப் படும். கடவுளுடைய திருவருள் ஒன்றே உயிரையும் உலகத்தையும் ஒன்றோடு ஒன்று பிணைந்து நிற்கவும் கடவுளோடு அவை இயைந்து நிற்கவுஞ் செய்வதாகும். கடவுள், உலகம், உயிர் என்ற முப்பொருளையும் அத்து விதமாக ஒற்றுமைப் படுத்தி நிற்பது கடவுளது **திருவருளே.** ஆதலாலே திருவருளே எல்லாம் என்று கூறினர் பெரியோர்.

ஔ. சு. து.

திருவைந்தெழுத்து என்பது, **சி, வ, ய, ந, ம** என்ற ஐந்து எழுக்களை; இந்த ஐந்து எழுத்தையும் கூட்ட வரும் **சிவயநம** வட மொழியில் ஒரு சொற்றொடர். இங்கு சொற்

ருடர் அன்று; எழுத்து திருவைந் **தெழுத்து.** இறைவன் பெயர்களுள் ஒன்றான நமசிவாய என்பதில் உள்ள எழுத்துக்கள். நமசிவாய - இறைவன் திருப்பெயர். சிவாய நம-பெயர்த் தன்மை நீங்கிய எழுத்துகள். **சி** - சிவபரம் பொருளையும், **வ** - அவனது அருளையும், **ய** - உயிரையும், **ந** - உயிரை மறைத்து நின்று இயக்கும் இறைவனுடைய மறைப்புச் சக்தியையும், **ம** - மலத்தையும் குறிக்கும். இவ்வெழுத் தைந்தினையும் எண்ணுங்கால், சிவத்துக்கும் உயிர்களுக்கும்; சிவத்துக்கும் உலகத்துக்கும்; உயிர்களுக்கும் உலகத்துக்கும் உள்ள தொடர் பும், அத்தொடர்பு உண்டான காரணமும் அதனால் வினையும் பயனும் எண்ணத்திற்கு வந்து இறைவன் திருவருள் நீ மலை விட்டு நீங்காது நிற்கும் நிலைமையைக் கைவரச் செய்யும். உடல் கருவிகளை நல்கிய இறைவன்,

அம்மட்டில் நில்லாது அவற்ரேடு கலந்து **ஒன்ருயும்**, உயிரோடு கூடி **உடனுயும்** உள் நின்று தோன்ருத்துணே செய்வது திருவைந்தெழுத்தை விதிப்படி ஓதுவதால் உணரப் படுகிறது.

நன்மை திமைகள் நம்மை சேராமலிருக்க, முதல்வனே முன்னே நிறுத்தி அவனுக்குள் நம்மை ஒன்றுவிப்பது தான் தக்கவழி. ... ... அப்போது உடல் கருவிகளின் இயக்கத்தால் உண்டாகும் பணிகளுக்கு இறைவன் பொறுப்பாளி. ஆதலால் ஏகனுகி நிற்க நிகழும் செயல் இறைபணி எனப்படும். ... ... **நான் எனது** என்று எழும் எண்ணங்கட்கு இடங்கொடாது கெடுத்து ஏகனுகி நிற்பதால், அப்போது நிகழும் செயல்களே முதல்வன் தானே ஏற்றுக் கொள்வன். ... ... இறைவன் நம் பொருட்டுக் காட்டுவதும் காண்பதுமாகிய இருவகைப்

பேருதவிகளைச் செய்வதை நினைக்கும்போது அவன்பால் வற்றாத பேரன்பு பெருகுகிறது. அன்பு பெருகுங்கால், அன்பின் விளைவாம் அருளே உருவாகவுள்ள அது நம்மைச்செலுத்தி விடுகிறது. ஆன்மா அவனது திருவடியாகிய அருள் நிலையத்தைச் சேர்ந்து பேரின்பத்தைப் பெறுகிறது. ... இறைவனோடு **ஏகனாகி இறை-பணி நிற்பதும்,** அவன் ஆன்மாவின் பொருட்டுக் காட்டும் உதவி, காணும் உதவி என்ற இருவகை உதவிகளைச் செய்து ஒழுகுவதை நினைந்து **அவன்பால் அயராத அன்பு செய்-வதும்** ஆகிய இருவகை அறங்கள் **சித்தாந்தச் சைவ நெறி** – திருநெறி – **சிவ நெறி** என்று வழங்கும்.

இனத்தியல்பால் அறிவு திரியும்; ஆதலால் சிவஞானச் செல்வர்கள் சிவ பரம்பொருளிடத்தே அன்புடையவர்கள் எவர்களோ

அவர்களோடே கூடி வாழ்வதுதான் செய்யத் தக்கது. ஆதலின் **அன்பரொடு மருவுக.** சிவத்தின்பால் உண்மை யன்புடையார் எல்லா வுயிரிடத்தும் அன்புடையராவர்; அவரால் இகழப்படுவோர் எவருமிலர்; எவ்வுயிரும் இல்லை. சாதி சமுதாய முதலிய வேற்றுமைக் கொள்கை சிவஞானிக்கும் சிந்தாந்தச் செந்நெறிக்கும் புறம்பு. ... ... சிலரை வேறு வைத்து இகழ்வதும், புகழ்வதும் சிவநெறி கைக்கொண்ட அன்பர் செயல் அல்ல.

திருவேடத்தின் நோக்கம் மெய்க்கு அணி செய்வதன்று.- பிறவிக்குரிய வினைப்பகையைக் கெடுக்கும் குறிப்பினதாகும். ... கோயிலின் காட்சிகள், உயிர்கட்குத் தொண்டுபுரியும் சிவப் பணியாகவே இருந்தமையின் கோயில்களை சிவன் என்றே வழிபட வேண்டுமென்பது சிவ ஞானிகள் திருவுள்ளம். ஆதலால் **திருக்-கோயில்களைச் சிவனெனவே தேறி வழிபடுக.**

சைவ சித்தாந்த சாத்திரங்கள்

திருவியலூர் **உய்யவந்த தேவர்** 1. திருஉந்தியார்; திருக்கடவூர் **உய்யவந்த தேவர்** 2. திருக்களிற்றுப்படியார்; திருவெண்ணெய்நல்லூர் **மெய்கண்டதேவர்** 3. சிவஞான போதம்; திருத்துறையூர் **அருள்நந்தி தேவர்** 4. சிவஞான சித்தியார், 5. இருபா இருபஃது; திரு அதிகை **மனவாசங்கடந்தார்** 6. உண்மை விளக்கம்; கொற்றவன்குடி **உமாபதி சிவாசாரியர்** 7. சிவப் பிரகாசம், 8. திருவருட்பயன், 9. வினா வெண்பா, 10. போற்றிபஃறொடை, 11. கொடிக்கவி, 12. நெஞ்சுவிடு தூது, 14. சங்கற்ப நிராகரணம்; சீகாழித் **தத்துவநாதர்**, 13. உண்மைநெறி விளக்கம்; அல்லது சீகாழி **சிற்றம்பல நாடிகள்** துகளறு போதம்.

இவற்றிற்கு வெளிவந்த உரைகள்:-†(1-2) பழைய பொழிப்புரை, திருவாவடுதுறை ஆதீன தில்லைச்சிற்றம்பலவர் என்னும் சிவப்பிரகாசத் தம்பிரான் விரிவுரை. 3-பாண்டிப் பெருமாள் உரை, பழைய சம்பிரதாய உரை, சிவஞானசுவாமிகள் சிற்றுரை, பேருரை (பாடியம்), சுப்பிரமணிய தேசிகர், சிவஞான சுவாமிகள் 'வெளிப்படை' என சிற்றுரையில் எழுதியதற்கு இட்ட உரை - தெளிபொருள் விளக்கவுரை. 4 - பரபக்கம் - திருஒற்றியூர் தத்துவப்பிரகாசர் உரை; சுபக்கம் - மறைஞானதேசிகர் உரை, சிவாக்கிர யோகிகள் உரை, நிரம்பவழகிய தேசிகர் உரை, ஞானப்பிரகாச முனிவர் உரை, சிவஞான சுவாமிகள் பொழிப்புரை, சுப்பிரமணியதேசிகர் பதவுரை, மு. திருவிளங்கம் உரை. 5 - சீகாழித்தத்துவநாதர் உரை, * திருவாவடுதுறை ஆதீன 5-ஆம்

தலைவர் வேலப்ப தேசிகர் மாணவர் நமச்சிவாயத் தம்பிரான் உரை. ‡6 - பதவுரை. 7-சிந்தனை உரை, மதுரை சிவப்பிரகாசர் உரை, இலக்கணம் சிதம்பரநாத முனிவர் உரை. 8-சிந்தனை உரை, நிரம்பவழகிய தேசிகர் உரை, சிவபாதசுந்தரம் விளக்கவுரை. ‡9. ‡(10,11,12) பழையவுரை, 13-சிந்தனை உரை. 14 - ஞானப்பிரகாச தேசிகர் உரை, பழைய உரை.

---

† சாத்திர தலைப்பில் இந்த எண் கொடுத்துள்ள மூல நூலுக்கு உரிய உரைகள்.

* மீண்டும் இவர் உரை கண்ட நூல் வருமிடத்து ‡ இக்குறி இடப்பட்டுள்ளது.

சரஸ்வதி பிரஸ், திருப்பாதிரிப்புலியூர்

பண்டார சாத்திரங்கள் ; *திருவாவடுதுறை ஆதின 3-ஆம் தலைவர்* **அம்பலவாண தேசிகர்** *1 தசகாரியம், 2. சன்மார்க்க சித்தியார், 3 சிவாச்சிரமத் தெளிவு, 4 சித்தாந்தப் பஃறொடை, 5 சித்தாந்த சிகாமணி, 6 உபாயநிட்டை வெண்பா, 7 உபதேச வெண்பா, 8 நிட்டை விளக்கம், 9 அதிசய மாலை, 10 நமச்சிவாய மாலை ; 2-ஆம் தலைவர் கால* **தட்சணாமூர்த்தி தேசிகர்** *11 தசகாரியம், 12 உபதேசப் பஃறொடை; 8 ஆம் தலைவர் கால* **சாமிநாத தேசிகர்**; *13 தசகாரியம்; 10-ஆம் தலைவர் கால சின்னப்பட்டம்* **பேரூர் வேலப்ப தேசிகர்**, *14 பஞ்சாக்கிரப் பஃறொடை.*

சைவ சித்தாந்த
மகா சமாஜப் பொன்விழா
நினைவு மலர்

இலவச வெளியீடு

தில்லை
திருச்சிற்றம்பலம்
29-12-'55
ஆதிரை நாள்.